வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டு பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் பரிசு வழங்கும் திட்டம் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

<u>கடித எண்.1779 /மா.அ.தி1 /2009 –1 நாள் 29.01.2009.</u>

அனுப்புநர்
திரு க. அஷோக்வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

அய்யா,

பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டு பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் பரிசு வழங்கும் திட்டம் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ..தி1) துறை, நாள் 2.7.2007.
2. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்கள் கடித எண்.40304/07/பரா.1.1 நாள் 19.1.2009.

பார்வை 2ல் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ள சூழ்நிலையில், அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ..தி1) துறை, நாள் 2.7.2007க்கு கீழ்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

<u>திருத்தம்</u>

அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ..தி1) துறை, நாள் 2.7.2007ன் இணைப்பில் தற்போதுள்ள பத்தி எண்.3க்கு பதிலாக கீழ்கண்ட புதிய பத்தி 3 சேர்க்கப்படுகிறது.

<u>“3. தேர்வு முறை”</u>

(i) இவ்விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கருத்துருக்கள் கோரி ஊரக மற்றும் ஊராட்சி இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக பல்வேறு தொழில் வர்த்தக மற்றும் சேவை நிறுவனங்களுக்குக் கடித வாயிலாகவும், பத்திரிகை செய்தி மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வெளியிடப்படும்.

(ii) மேலும், இவ்விருதுக்கான கருத்துரு குறித்த பத்திரிகைச் செய்தி தமிழக அரசு/ இத்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, 45 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படும்.

(iii) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் நேரடியாக பெறப்பட்டுள்ள நிறுவனங்களின் விண்ணப்பங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரால் உரிய நாளுக்கு பின்னர் சேகரிக்கப்படும்.

(iv) சேகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பரிசீலனை செய்து, தகுதியுள்ள 15 நிறுவனங்களை அடுத்த கட்ட ஆய்வுக்காக தேர்வு (Shortlist) செய்வார்.

(v) தேர்வு செய்யப்பட்ட 15 நிறுவனங்கள் குறித்த மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்புரையினை பெற்றிட அல்லது கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்கள் மூலமாக தல ஆய்வு மேற்கொள்ள அல்லது இவை இரண்டிற்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஏற்பாடு செய்வார். கருத்துருக்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் விவரங்களுடன் உண்மை நிலையில் ஏதேனும் பெருத்த வேறுபாடு காணப்பட்டால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(vi) அதன் பின்னர் மேற்கண்ட 15 நிறுவனங்களிலிருந்து, தகுதியின் அடிப்படையில் 10 நிறுவனங்களை தேர்வு செய்து இறுதி முடிவெடுக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைப்பார்.

(vii) மேற்கண்டவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பரிந்துரைக்கும் பட்டியலிலிருந்து விருதுக்கான ஐந்து நிறுவனங்களை அரசு இறுதியாக தேர்வு செய்யும்.

தங்கள் உண்மையுள்ள,
அரசு முதன்மைச் செயலாளருக்காக.